CHOOSE THE WORLD YOU WANT

FAIRTRADE

# உங்கள் பருவநிலை வாக்குறுதிக்கு நியாயமாக நடந்துகொள்ளுங்கள் – சிறுகுறு விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களில் முதலீடு செய்யுங்கள்

**அன்பார்ந்த உலகத் தலைவர்களே,**

உலகெங்கிலும் விவசாயத் தொழிலில் ஈடுபட்டுவரும்**1.8 மில்லியன் ஃபேர்டிரேட் விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களின்** சார்பாக இக்கடிதத்தை நாங்கள் எழுதுகிறோம். உலகெங்கிலும் உள்ள மக்களின் மேசைகளில் உண்ணப்படும் உணவையும், மற்ற அத்தியாவசிய பொருட்களையும் நாங்கள் உற்பத்தி செய்கிறோம். ஆனால் பருவநிலை பாதிப்பு தொடர்பான வாக்குறுதிகள் பல ஆண்டுகளாக நிறைவேற்றப்படாததால் நமது சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்ட அஜாக்கிரதையான கேடுகளால் எங்களின் விவசாயம் செய்யும் திறன் மிகவும் பாதிப்படைந்துள்ளது.

- ஒரு நாள் எங்கள் வயல்களை வறண்ட நிலமாகவும் மறுநாள் வயல் நிலமெல்லாம் வெள்ளம் புகும் ஒரு கடுமையான வானிலைக்கு காரணமான **உமிழ்வுகளைக் குறைப்பதாக நீங்கள் உறுதியளித்தீர்கள்**. உமிழ்வுகள் ஆபத்தான முறையில் அதிகரித்து வருகின்றன ஆனால் அதற்கான உங்கள் லட்சியம் மிகக் குறைவானதே .
- மாறிவரும் பருவநிலையிலும், தொடர்ந்து உணவுப்பொருட்களை உற்பத்தி செய்வதற்கு எங்களுக்கு உதவ, **பருவநிலை நிதியுதவியை வழங்குவதாக நீங்கள் உறுதியளித்தீர்கள்**. ஆனால் கிட்டத்தட்ட அவ்வாறு எதுவும் எங்களை வந்தடையவில்லை.

- நீங்கள் சுரண்டுபவரிலிருந்து பங்குதாரரர் **வணிகமாக மாற்ற உறுதியளித்தீர்**. ஆனால் பங்குதாரரர்கள் பில்லியன் கணக்கில் சம்பாதிக்கிறார்கள், ஆனால் மில்லியன் கணக்கான விவசாயிகளோ ஒரு நாளைக்கு ஒரு டாலருக்கும் குறைவாகவே சம்பாதிக்கிறார்கள்.

உகாண்டாவில் பேரழிவு வெள்ளம், மடகாஸ்கரில் வறட்சி, ஆபிரிக்க கண்டம் முழுவதும் வெட்டுக்கிளிகள் படையெடுப்புகள் உள்ளிட்ட கடுமையான வானிலையால் சமீபத்திய மாதங்களில் பயிர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு, ஆபிரிக்காவில் இதுவரை காணத அளவுக்கு ஜனவரி மற்றும் ஜூன் மாதங்களில் அதிக வெப்பம் இருந்தது. மத்திய அமெரிக்காவில், ஈட்டா மற்றும் அயோட்டா சூறாவளிகள் ஹோண்டுராஸில் மட்டும் 2 பில்லியன் டாலருக்கும் அதிகமான சேதத்தை ஏற்படுத்தின மற்றும் ஃபேர் டிரேட் விவசாயிகள் மிகக்கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர் இந்தியாவில் உள்ள நமது உறுப்பினர்கள் தீவிர வெப்பஅலைகள், வறட்சி, ஒழுங்கற்ற மழைப்பொழிவு முதலியவற்றை எதிர்கொள்கின்றனர் என்று புதிய ஐபிசிசி கணிப்புகள் கூறுகின்றன. நிச்சயமாக, இது உலகிற்குத் தேவையான உணவை உற்பத்தி செய்யும் நமது திறனுக்குத் தீங்கு விளைவிக்கிறது. நமது வாழ்வாதாரங்கள் நமது விவசாய விளைபொருள்களுடன் தொடர்புடையதால், வறுமை மீண்டும் நம்மிடையே பெருகிவருகிறது. ஆனால் இதன் பாதிப்பு இன்னும் ஆழமானது. நமது நிலம் மற்றும் நீருக்கு ஏற்படும் பாதிப்பு வளங்களுக்காகப் போட்டிப்போடும் நிலைக்கு கொண்டுவருகிறது, விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் என்ற முறையில் நாங்கள் எப்போதும் இல்லாத அளவுக்கு அதிகரித்து வரும் சமூக மற்றும் பொருளாதார பதட்டங்களை எதிர்கொண்டுவருகிறோம்.

இந்த தீங்கானது விவசாய குடும்பங்களில் உள்ள பெண்களின் தலையில் பொருத்தமற்ற முறையில் விழுகிறது, அவர்கள் பெரும்பாலும் மிகக் குறைந்த ஊதியம் பெறுபவர்கள் மற்றும் மிகவும் கடினமான சூழ்நிலைகளில் வேலை செய்கிறார்கள். இந்த சூழ்நிலைகளின் கீழ் நமது இளைஞர்கள் விவசாயத்தில் ஈடுபட ஆர்வம் காட்டவில்லை, யார் அவர்களைக் குற்றம் சாட்ட முடியும்? வருங்காலத்து தலைமுறையினர் விவசாயத்தை வறுமை உண்டாக்குவது தவிர வேறெதுவும் இல்லாததாக பார்த்தால் உலகத்திற்கான உணவை யார் விளைவிப்பார்கள்?

நாங்கள் சொல்ல விரும்பும் மற்றொரு கதையும் உள்ளது. உலகெங்கிலும் உள்ள எங்கள் விவசாய நிலங்களில், தேவையான மாற்றங்களை செய்து கொண்டிருப்பதை நீங்கள் ஏற்கனவே காணலாம். மரம் நடுவதன் மூலம் கானாவில் சூரியனிலிருந்து கோகோவும் மற்றும் கென்யாவில் வெள்ளம் ஏற்படுவதைதேயிலையும் பாதுகாக்கிறது மற்றும் குவாதிமாலாவில் தேனீக்களுக்கு அதிக உணவு கிடைக்கிறது. ஆபிரிக்கா மற்றும் மத்திய

கிழக்கு, லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன், மற்றும் ஆசியா மற்றும் பசிபிக் கில் உள்ள ஃபேர்டிரேட் அணிகள், விவசாயிகள் தங்கள் பயிர்களை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்பதை பகிர்ந்து வருகின்றன.

**Signed on behalf of Fairtrade farmers and workers,**

**Mr Kouamé N'dri Benjamin-Francklin**

Producer Representative of Fairtrade Africa (FTA)

Board Member of FTA and Chairman of SCOOPS-ECAM, Yamoussoukro, Cote D'Ivoire

**Mr Miguel Munguía**

Producer Representative of Latin American and Caribbean Network of Fairtrade Small Producers and Workers (CLAC)

President of CLAC and Manager of Educe-Cooperativa

**Mr Meher Pravakar**

Producer Representative of Network of Asia and Pacific Producers (NAPP)

Board Member of NAPP and Project Director at Pratima Organic Grower Group

For more information, contact:
**media@fairtrade.org.uk**
**communications@fairtradeafrica.net**

எங்கள் விவசாய நிலங்களைப் பருவநிலைகளை சமாளித்து தாக்குப்பிடிப்பதற்கு எற்ப மாற்றுவதற்குத் தேவையான முதலீட்டை எங்கள் மிகவும் பொறுப்பான வாங்குபவர்களுடனான கூட்டாண்மைகள் எங்களுக்கு வழங்குகின்றன மற்றும் போக்குவரத்து மற்றும் பண்ணை உமிழ்வுகளைக் குறைக்கின்றன. நியாயமான விலைகள் மற்றும் ஃபேர்ட்ரேட் பிரீமியம் செலுத்தி ஃபேர்ட்ரேட் வணிகங்கள் எங்கள் எதிர்காலத்தில் முறையாக முதலீடு செய்யும் போது, எங்கள் தாக்குப்பிடித்து மீண்டெழும் தன்மை ஏற்கனவே வளர்ந்து வருகிறது.

ஆனால் நிச்சயமாக, இந்த அத்தியாவசிய வேலைக்குப் பணம் செலுத்த வேண்டும். உதாரணமாக, காபி புதர்களுக்கு மத்தியில் மரங்களை நடுவது சூரியனிலிருந்து அவற்றைக் பாதுகாக்கும் மற்றும் பயிருக்கு ஏற்படும் நோய் மற்றும் வெள்ள பாதிப்பைக் குறைக்கலாம் - ஆனால் உற்பத்தி செலவுகள் அதிகமாகின்றன என்று அர்த்தம். விவசாயிகள் தங்கள் வாழ்வாதாரத்திற்கு கூட வருமானம் ஈட்ட முடியாதபோது, இந்த மாதிரியான அத்தியாவசிய மாற்றங்களுக்கு நாம் எவ்வாறு நிதியளிக்க முடியும்?

2050 க்குள் மாற்றம் என்பது மிகவும் தாமதமானது. பணக்கார, அதிக-மாசுபடுத்தும் நாடுகள் என்ற முறையில், தகவமைவு மற்றும் தணிப்பு நடவடிக்கைகளுக்கு ஆகும் செலவுகளை செலுத்துவதற்கான உங்கள் வாக்குறுதிகளை இப்போது நீங்கள் நிறைவேற்ற வேண்டும். கார்பன் உமிழ்வைக் குறைப்பதற்கான உங்கள் வாக்குறுதியை இனியும் மறுக்கக் கூடாது. போக்குவரத்து அல்லது எங்கள் நாடு உட்பட நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களிலிருந்து வெளியிடப்படும் உமிழ்வைத் தவிர்க்கும் அல்லது உண்மையாகவே உமிழ்வுகளைக் குறைக்க வழிவகுக்காத ‘நெட் ஜீரோ’ உறுதிமொழிகளை நாங்கள் ஏற்க மாட்டோம். சர்வதேச கப்பல் தொழில் ஒரு நாடாக இருந்தால், அது உலகின் ஏழாவது பெரிய உமிழ்ப்பானாக இருக்கும்

இப்போது நடவடிக்கை எடுக்க நாங்கள் உங்களைக் கேட்டுக்கொள்கிறோம்:

1. **பருவநிலை நிதியில் 100 பில்லியன் டாலர் வழங்கும் உங்கள் வாக்குறுதியை இப்போது நிறைவேற்ற வேண்டும். அது நேரடியாக விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களை சென்றடைய வேண்டும்,** இதனால் நாம் மரங்களை நடலாம், மேலும் பருவநிலை மாற்றங்களைத் தாக்குப்பிடிக்கக்கூடிய பயிர்களை அறிமுகப்படுத்தலாம், வரவிருக்கும் புயலுக்கு நம்மை தயார்படுத்திக்கொள்ளலாம் - மற்றும் உலகத்திற்கான உணவை தொடர்ந்து விளைவிக்கலாம்.

2. **நீங்கள் உங்கள் கார்பன் உமிழ்வுகள் குறித்து நேர்மையாக இருக்க வேண்டும்,**

**மற்றும் அறிவியல்பூர்வ ஆலோசனைக்கு ஏற்ப அவற்றை மீண்டும் குறைக்க தைரியம் கொண்டிருக்க வேண்டும்**. உங்கள் உள்நாட்டு உமிழ்வுகள் மட்டுமல்லாது இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களிலிருந்து உமிழ்வைக் குறைப்பதற்கான இலக்குகள் மற்றும் கொள்கைகள் உங்கள் நெட் ஜீரோ உறுதிப்பாடுகளில் உள்ளன என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள், இது நிஜமாகவே உமிழ்வை குறைப்பவை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள், மாறாக உங்கள் நாட்டில் விமானப் போக்குவரத்து மற்றும் கப்பல் போக்குவரத்து முதலிய வெறுமென உமிழ்வை ஈடுசெய்பவைகளை வாங்குவது அல்ல. உறுதியான பங்களிப்புகள் நீங்கள் எடுக்க வேண்டிய ஒரு அத்தியாவசிய நடவடிக்கையாகும். எங்கள் பணியை செய்ய எங்கள் வாங்குபவர்களுடன் பணிபுரிய நாங்கள் தயாராக இருக்கிறோம், ஆனால் நீங்கள் வழிநடத்த வேண்டும்.

3. **எதிர்கால வர்த்தக ஒப்பந்தங்கள் அதிக கார்பன் உமிழ்வை வெளியிடும் வர்த்தகத்தை குறைத்து நியாயமான மற்றும் குறைந்த கார்பன் உமிழ்வை வெளியிடும் வர்த்தகத்தை ஊக்குவிக்க வேண்டும்**. வர்த்தக ஒப்பந்தங்கள் பருவநிலை பாதிப்புகளைத் தாக்குப்பிடிப்பதில் முதலீடு செய்து அத்தகைய பாதிப்புகளைச் சமாளிப்பதில் விவசாயிகளுக்கும் வணிகங்களுக்கும் உதவி செய்ய வேண்டும் மற்றும் புதைபடிவ எரிபொருள் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதையும் பிரித்தெடுத்தல், சுரண்டல் சந்தை இயக்கத்தை ஊக்குவிப்பதையும் நிறுத்த வேண்டும்.

4. **நீங்கள் வணிக ஒழுங்குமுறைகளை பலப்படுத்த வேண்டும்,** இதன் மூலம் வணிகங்கள் நிலையான விநியோக சங்கிலிகளில் முதலீடு செய்யவும், விவசாயிகளுக்கு நியாயமான விலைகளை செலுத்தவும், மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கான பொறுப்பை அவற்றின் விநியோக சங்கிலிகளில் எடுத்துக் கொள்ளவும் ஊக்குவிக்கப்படுகின்றன. நாங்கள் சுற்றுச்சூழலுக்கானப் பொறுப்புகளைக் காண வேண்டும், இதனால் வணிகங்கள் காடழிப்பைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கும் - மற்றும் விவசாயிகள் பாதிப்படையாத வகையில், இதை செயல்படுத்துவதை நாங்கள் காண வேண்டும். தேவைப்பட்டால், தங்கள் பொறுப்புகளை நிறைவேற்றாத வணிகங்களுக்கு நெருக்கடி கொடுக்க நீங்கள் தயாராக இருக்க வேண்டும்.

கோவிட்-19 கடந்த இரண்டு ஆண்டுகளில் நமது உலகை சூறையாடி சின்னாபின்னமாக்கியுள்ளது. ஆனால் நாம் இப்போது பருவநிலை பாதிப்புக்கு எதிராக செயல்படத் தவறினால் நாம் அனைவரும் அனுபவிக்கும் தீங்குடன் ஒப்பிடுகையில் இதன் கோவிட்-19 இன் தாக்கம் ஒன்றுமேயில்லை. உலகின் உணவு உற்பத்தியாளர்களின் பிரதிநிதிகள் என்ற முறையில், இந்த தருணத்தை பயன்படுத்திக்கொள்ளவும், எங்கள் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவும், தொடர்ந்து எங்களால் உலகிற்கு உணவளிக்க

முடியும் என்பதை உறுதிப்படுத்தவும் நாங்கள் உங்களிடம் வேண்டிக்கொள்கிறோம்.